மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2022ம் ஆண்டு ஜூன் திங்கள் 16ம் நாள் வியாழக்கிழமை

இ.ம.எண்.274/2018
உள்
அசல் வழக்கு எண்.99/2015

-------------

எஸ்.சுப்புராஜ் ... மனுதார்/வாதி

/எதிர்/

1. தமிழக அரசுக்காக அதன் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் மூலமாக
2. தாசில்தார், சாத்தூர்
3. செல்லச்சாமி
4. சுப்பிரமணியன் ... எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 27.07.2018ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 14.06.2022ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதார்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.மைக்கேல் பாரதி அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை.1 அவர்கள் ஆஜராகி எதிர்உரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சந்திரசேகர் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் 3, 4 எதிர்மனுதார்கள் தரப்பு எதிர்உரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 9-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், கடந்த 04.07.2018ம் தேதி

அன்று வாதியின் வருகையின்மையினாலும், தவறுகையினாலும் தள்ளுபடி செய்யப்பட்ட மேற்படி எண் அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து விசாரணைக்கு உத்தரவிடுமாறு 20.07.2018ம் தேதி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2). மனுதார்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-</u>**

இவ்வழக்கானது வழக்கிடை சொத்தின் வழியாக ஒரு வண்டிப்பாதை உள்ளதாக கிராம வரைபடத்தில் காணப்படும் குறிப்புகளை 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளின் ஆவணங்களில் நீக்கம் செய்யும் படியான ஒரு செயலுறுத்துக்கட்டளையும் மற்றும் 31.07.2015 தேதியிட்ட ந.க.A4/7762/2015 அறிவிப்பானது இல்லா நிலையது மற்றும் செல்லா நிலையது என விளம்புகை கோரியும், அதனை தொடர்ந்து வழக்கிடை சொத்தில் வண்டிப்பாதை உள்ளது என பிரதிவாதிகள் எவ்விதத்திலும் உரிமை கோரக்கூடாது என ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்து கட்சி செய்து வந்தனர். வாதியாகிய மனுதாரர் ராஜஸ்தான் மாநிலத்தில் இந்திய பாகிஸ்தான் எல்லையில் இந்திய இராணுவத்தில் பணி செய்து வருகிறார். கடந்த சில மாதங்களாக இந்திய பாகிஸ்தான் எல்லையில் அசாதாரணமான சூழ்நிலை நிலவியபடியால் இவ்வழக்கானது 04.07.2018 அன்று கட்டாய விசாரணை பட்டியலில் இடம்பெற்றிருந்தது. அன்றைய தினம் மனுதாரர் இராணுவத்தில் பணி செய்தபடியாலும் எளிதில் விடுப்பு கிடைக்காத காரணத்தினாலும் கடந்த 04.07.2018 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகி மனுதாரர் தரப்பில் வழக்கு விசாரணையை ஆரம்பிக்க இயலாமல் போயிற்று. அதனால் அன்றைய தினம் மேற்படி எண் வழக்கு மனுதாரர் வருகையின்மையினாலும், தவறுகையினாலும் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. மனுதாரர் 04.07.2018 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத செயல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாக ஏற்பட்டது. இது தவிர வேறு எந்த உள்நோக்கமும் மனுதாரருக்கு இல்லை. ஆகவே, மனுதாரர் வழக்கினை மீண்டும் கோப்புக்கு எடுத்து விசாரணைக்கு உத்தரவிடாவிட்டால் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஈடு செய்ய

முடியாத இழப்பும் ஏற்படும். எனவே, கடந்த 04.07.2018ம் தேதி தள்ளுபடி செய்ய்பபட்ட மேற்படி எண் அசல் வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுத்து விசாரணை செய்து வழக்கை தொடர்ந்து மேல்நடத்த அனுமதியளித்து உத்தரவிடுமாறு மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

<u>3). 3, 4 எதிர்மனுதார்கள்/3, 4பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரை சுருக்கம்:-</u>

மனுதாரர் மனுவில் இந்திய பாகிஸ்தான் எல்லையில் எந்த தேதியில் இருந்து எந்த தேதி வரை அசாதாரணமான சூழ்நிலை இருந்தது என்று தெரிவிக்கவில்லை. அதனாலேயே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். வாதி வழக்கினை அரசு ஆவணங்களின்படி பூமியில் உள்ள பொது வண்டிப்பாதையை ஆக்கிரமிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் வழக்கை தாக்கல் செய்து அசல் வழக்கை விரைவில் முடிக்காமல் காலதாமதம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் செயல்பட்டு வருவதால் மனுதாரர் தாக்கல் செ்துள்ள மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். மனுதாரர் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்பதால்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரர்கள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தவிட வேண்டுமென்று எதிர்உரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5). மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

<u>7). தீர்வு:-</u>

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த வழக்கில் இந்த சூழ்நிலையில் ஏற்பபுடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து

வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் கடந்த 04.07.2018ம் தேதியில் தள்ளுபடியான மேற்படி வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிடுமாறு தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில், மனுதாரரால் தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டத்திற்கும் ஆளாகக் கூடும். எனவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, கடந்த 04.07.2018ம் தேதியில் தள்ளுபடியான மேற்படி வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிட வேண்டுமென்று மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஜூன் திங்கள் 16ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதார்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை
3, 4 எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.